வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 25.02.2026 புதன்கிழமை இதழ் : 51 பக்கங்கள் : 08




## யாழ். சர்வதேச கிரிக்கெட் மைதான திட்டம் தொடரும்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி



கொழும்பு, பெப். 25

யாழ்ப்பாணம் - மண்டைதீவு பகுதியில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கும் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மண்டைதீவில் அமையவுள்ள இந்த மைதானத்துக்கான கட்டுமானப் பணிகளை, முறையான சுற்றுச்சூழல் அனுமதிச் செயல்முறைகள் பூர்த்தியாகும் வரை தற்காலிகமாக நிறுத்துமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானக் கட்டுமானப் பணியானது நிச்சயம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. ஒரு பாரிய திட் டத்தை முழுமைப்படுத்த வேண்டுமெனில்,

07

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சர்வதேசத் தரத்தில் அமையவேண்டும்!

### இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம்

கொழும்பு, பெப். 25

இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் “பயங்கரவாதம்” என்பதற்கான வரைவிலக்கணத்தை சர்வதேச தரத்திற்கு அமையக் குறைக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தம் கொடுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு மாற்றீடாகக் கொண்டுவரப்படும் இந்தப் புதிய சட்டமூலம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

தற்போதைய வரைவுத் திட்டத்தில் “பயங்கரவாதம்” என்பது மிகவும் விரிவாகவும், தெளிவற்ற முறையிலும் வரையறுக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக ரீதியிலான அமைதிப் போராட்டங்கள், சிவில் சமூகச் செயற்பாடுகள் மற்றும் மாற்று அரசியல் கருத்துக்களைக் கூட “பயங்கரவாதக் குற்றங்களாக” வகைப்படுத்த வழிவகுக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இதனைத் துல்லியமான சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்பச் சுருக்குவது அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதித்துறைக்கு மிக அவசியமான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத்

07

## ஜே.வி.பி. இந்தியாவை அல்ல ராஜீவ் அரசையே எதிர்த்தது!

### விளக்குகிறார் ரில்வின் சில்வா



கொழும்பு, பெப். 25

தாம் இந்தியாவை எதிர்க்கவில்லை எனவும் ராஜீவ் காந்தி அரசாங்கத்தையே தாம் எதிர்த்ததாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

07

## பல்கலை ஊழியர் இன்று அடையாள எதிர்ப்பு!

கொழும்பு, பெப். 25

நாடெங்கிலும் உள்ள 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றோடிணைந்த உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் போதனை சாராப் பணியாளர்கள் இன்று நண்பகல் 12 மணி முதல் ஒரு

07

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது பாதிக்கப்பட்டோருக்கு விரைவில் நீதி

### அரசாங்கம் உறுதிமொழி

கொழும்பு, பெப். 25

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நீதியை பெற்றுக் கொடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இந்த தாக்குதலை தடுக்க தவறியவர்கள், இந்த தாக்குதலை வழிநடத்தியவர்கள் மற்றும் இந்த தாக்குதலுடன் தொடர்புடையவர்கள்

07

## மைத்ரீ விக்கிரமசிங்கவை ஆதரித்து புலமையாளர்கள் 85 பேர் அறிக்கை!

கொழும்பு, பெப். 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதான அரச நிதி விரயக் குற்றச்சாட்டு விசாரணைகளின் ஒரு கட்டமாக அவரது மனைவி பேராசிரியர் மைத்ரீ விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறித்து ஆழ்ந்த

07

## பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் இராணுவ வர்த்தக நடவடிக்கைக்கு தடை!

யாழ்ப்பாணம், பெப். 25

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள், இராணுவத்தினால் நடத்தப்படும் வர்த்தக நடவடிக்கைகளை தடை செய்வது எனவும், புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டத்தை நிறுத்தவேண்டும் எனவும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும், நேற்று பருத்தித்துறை பிரதேச சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில், நேற்று காலை 10:20 மணியளவில், யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கும், மாவீரர்களுக்கும் அஞ்சலி

07

## இலங்கையில் 85 கட்சிகள்!

கொழும்பு, பெப். 25

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் மாத்திரம் புதிதாக ஐந்து அரசியல்

07

## தென்மாகாண ஆளுநராக பேராசிரியர் சுசிறிபால!



கொழும்பு, பெப். 25

தென் மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பேரா சிரியர் சுசிறிபால மனவடு கடமைகளைப் பொறு ப்பேற்றுக் கொண்டார்.

07

## வடக்கின் மையமாக மாங்குளம் உருவாகும்!

### ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, பெப். 25

கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி வடக்கின் மையமாக மாங்குளத்தைக் கட்டியெழுப்புவோம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித் துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார

07

## மட்டுவில் பொருளாதார நிலையத்தை இயங்க வைப்பதற்கு அரசு நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25

தென்மராட்சியிலுள்ள மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தை மறுசீரமைத்து சீரான இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, யாழ்.மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரான்சிஸ் சந்திரா

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா; அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி!

**யாழ். அரச அதிபர் பிரதீபன் தகவல்**

யாழ்ப்பாணம், பெப். 25

வரலாற்றுச் சிறப்பு மிக்க கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த திருவிழா எதிர்வரும் 27 ஆம்,28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது. கலந்துரையாடலை தொடர்ந்து நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார், வடமாகாண கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே, இந்திய துணைத் தூதரக அதிகாரி சி.எஸ்.றம்மியா, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளரும் யாழ் மாநகர சபையின் உறுப்பினருமான எஸ்.கபிலன், பாதுகாப்பு படைகளின் அதிகாரி லெப்.கேணல் கே.எம்.சி.எஸ். டி.கருணாதிலக, உதவி பொலிஸ் அத்தியகட்சகர் கொ.டி.சில்வா, மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா.ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ்.கிருபாகரன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி, நெடுந்தீவு, வேலணை பிரதேச செயலாளர்கள், வைத்திய அதிகாரிகள், சுங்கத் திணைக்கள அதிகாரிகள், துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள், படகு உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# ஆறாம் தர மாணவர்களுக்கான புதிய கற்றல் பாடநெறிகள் தயார்

கொழும்பு, பெப். 25

கல்வி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், ஆறாம் தர மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட புதிய கற்றல் பாடநெறிகள் இறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ, புதிய பாடநெறிகள் தொடர்பான இறுதிக்கட்ட மதிப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இப்புதிய பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆசிரியர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவும், அவர்களைத் தயார்படுத்துவதற்காகவும் வரும் நாட்களில் விசேட பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும்,

இதன்படி, எதிர்வரும் ஆண்டு முதல் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் ஆறாம் தர மாணவர்களுக்காக இந்த புதிய கல்விப் பாடநெறிகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு அநுர அரசின் வெறும் 'பொய் நாடகம்'

**ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு**




கொழும்பு, பெப். 25

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் அனைத்தும் வெறும் 'பொய் நாடகம்' என்றும், இதில் எழுத்துபூர்வமான எந்தவொரு உறுதிப்பாடும் இல்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படுவதாகக் கூறப்படும் சம்பள அதிகரிப்பு தொடர்பாக தோட்ட நிறுவனங்களிடம் இருந்து முறையான சட்ட ரீதியான உடன்படிக்கைகள் எதுவும் எட்டப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்து வரும் கருத்துக்களை வழிமொழிந்த ஹரின் பெர்னாண்டோ, தோட்டத் துறை சார்ந்த அனுபவம் கொண்ட ஜீவன் தொண்டமான் கூறுவது போல, இந்தச் சம்பள அதிகரிப்பில் வெளிப்படைத்தன்மை இல்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க, ஒரு புரிந்துணர்வின் அடிப்படையிலேயே தோட்ட நிறுவனங்கள் இந்தச் சம்பள அதிகரிப்பை வழங்க முன்வந்துள்ளனவே தவிர, இது நிலையான ஒன்றல்ல எனக்குறிப்பிட்டார்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியிலும் இவ்வாறான கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், அவர் குறுகிய காலமே பதவியில் இருப்பார் என்ற கணிப்பில் நிறுவனங்கள் அதற்கு இணங்கவில்லை என்றும், தற்போது அநுரகுமார திஸாநாயக்க அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக இருப்பார் என்பதால் தற்காலிகமாக இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும் அவர் விவரித்தார். (அ)

# தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும்

**அமைச்சர் பிமல் ரத்நாயக்க**



கொழும்பு, பெப். 25

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளியலாளர் ஹர்ஷன சூரியப்பெரும குறிப்பிடும் பொருளாதார வளர்ச்சியை அடையாவிட்டால், தற்போதைய தலைமுறையினரின் வாழ்நாளில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை 10 அல்லது 15 ஆண்டுகளில் அடைய முடியுமா என்பது குறித்த மூலோபாய ரீதியான கவலை நிலவுகிறது.

ஒதுக்கப்படும் நிதி ஒரு தெளிவான கவனம் மற்றும் இலக்கிற்கு இணங்க செலவிடப்படாவிட்டால், எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடைய முடியாது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்குவதே இதன் முக்கிய நோக்கமாக உள்ளது-என்றார். (அ)

# 16 சீனர்கள் கைது!

கொழும்பு, பெப். 25

கொழும்பு , ஜாவத்தை வீதி மற்றும் டொன் கரோலிஸ் வீதி ஆகிய பகுதிகளில் விசா விதிகளை மீறி தங்கியிருந்து, இணையத்தளம் ஊடாக பாரியளவிலான பிரமிட் நிதி மோசடியில் ஈடுபட்ட 16 சீன நாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கறுவாத்தோட்டம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.கைது செய்யப்பட்ட சீன நாட்டவர்கள் 23 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டபோது சந்தேகநபர்களிடமிருந்து 23 மடிக்கணினிகள், 11 கைபேசிகள், 09 குரல் மொழிபெயர்ப்பு இயந்திரங்கள் , வெளிநாட்டு சிகரெட்டுகள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியை வலுவாக்க நடவடிக்கை!

**புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமனம்**




கொழும்பு, பெப். 25

நாடளாவிய ரீதியில் உள்ள கட்சியின் அமைப்பாளர் வலைப்பின்னலை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமனம் மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்திக்காக 30 புதிய தொகுதி அமைப்பாளர்களை விரைவில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக விண்ணப்பித்த பெருமளவிலானோரில் இருந்து சிறந்த 30 பேரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் அண்மையில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்யக்கூடிய, தகுதியுள்ள நபர்களையே நியமிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வழங்கிய அறிவுறுத்தலின் பேரில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன-என்றார். (அ)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் அதிகாரிகளின் உதவியுடன் கிரவல் அகழ்வு

கிளிநொச்சி, பெப். 25

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் அதிகாரிகளின் உதவியுடன் அளவுத் திட்டத்துக்கு மேல் கிரவல் அகழ்வு இடம்பெறுவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி கல்மடு மற்றும் அக்கராயன் பகுதிகள், முல்லைத்தீவு கொக்காவில் ஆகிய பகுதிகளில் கிரவல் அகழ்வதற்கு கனிய வளத் திணைக்களத்தால் அனுமதிகள் வழங்கப்பட்டாலும் குறித்த அனுமதிகள் வழங்கிய பின்னர் அந்த இடங்களை அவதானிப்பதில்லை என மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா நேரில் சென்று பார்வையிட்டு நிலைமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். (அ)

# ஆடைத் தொழிற்சாலைப் பெண்கள் மீது உடல், உள ரீதியான தொடர் துன்புறுத்தல்

கொழும்பு, பெப். 25

ஆடை உற்பத்தி தொழிற்துறையில் ஈடுபடும் பெண்கள் தொடர்ச்சியாக உடல், உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருவதாக வர்த்தக கைத்தொழில் தொழிலாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

குறித்த சங்கத்தினால் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போது இந்த விடயங்கள் தொடர்பில் வலியுறுத்தப்பட்டன.

வேலைத்தளங்கள், வீடுகள் மற்றும் பொது இடங்களில் பெண்கள் தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றமை தொடர்பில் பாரிய அளவில் கவனம் செலுத்தப்படுவதில்லை என வர்த்தக கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் தலைவி சுவஸ்திகா அருலிங்கம் தெரிவிக்கின்றார்.

குறிப்பாக பெருந்தோட்டதுறைகளிலும், ஆடைத் தொழிற்துறையிலும் ஈடுபடும் பெண்கள் சொல்ல முடியாதளவு துன்பங்களை அனுபவிப்பதாக அவர் கூறினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.02.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 13
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com

## பாராளுமன்ற உறுப்பினர்களும் ஓய்வூதிய ஒழிப்பும்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 2024 தேசிய தேர்தல்களில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பெருவாரியானவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்ற போதிலும், ஊழல், முறைகேடுகளை ஒழிப்பது தொடர்பிலான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அது கருத்தூன்றிய கவனத்தை செலுத்தி வருவது வரவேற்கத்தக்கது.

இது விடயத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் அரசாங்கச் செலவில் அனுபவித்துவந்த ஆடம்பரமான வசதிகளை ஒழிப்பதற்கு கடந்த வருட பிற்பகுதியிலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியங்களை ஒழிப்பதற்கு இந்த மாதம் நடுப்பகுதியிலும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரு சட்டங்களும் குறிப்பிடத்தக்கவை. முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை ஒழிக்கும் சட்டம் குறித்து தற்போது எம்மத்தியில் வாழும் முன்னாள் ஜனாதிபதிகள் விசனம் தெரிவித்தார்களே தவிர, மக்கள் அதை பெரிதும் வரவேற்கவே செய்தார்கள்.

ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ஒழிக்கும் சட்டம் இதுவரை ஓய்வூதியத்தை பெற்றுவந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் கண்டனத்துக்கு உள்ளானது மாத்திரமல்ல, சில சிவில் சமூக அமைப்புக்களும் கூட ஓரளவு எதிர்மறையான விமர்சனத்தை முன்வைத்தன.

ஓய்வூதியத்தைப் பெற்று வந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் எல்லோருமே வசதி படைத்தவர்கள் அல்ல. சிலர் அந்த ஓய்வூதியத்தை நம்பியே தங்கள் வாழ்க்கையை ஓட்டினார்கள் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இனிமேல் ஓய்வூதியம் கிடைக்கப் போவதில்லை. அதனால், வசதிபடைத்த பின்புலத்தைக் கொண்டவர்களை தவிர, எளிமையான பின்புலத்தை கொண்டவர்கள் அரசியலுக்கு வருவதில் ஆர்வம் காட்டமாட்டார்கள் என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இந்த கருத்தின் தர்க்கம் ஓய்வூதியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் வசதிகுறைந்த வர்க்கத்தை சேர்ந்தவர்கள் அரசியலுக்கு இதுவரையில் வந்தார்கள் என்றல்லவா அமைகிறது.

அரசியலில் ஈடுபட்டு ஏற்கெனவே தங்களிடமிருந்த சொத்துக்களை இழந்த அரசியல்வாதிகள் முன்னொரு காலத்தில் இருந்தார்கள். அண்மைக் காலத்தில் அரசியலில் ஈடுபட்டவர்கள் அதுவும் குறிப்பாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் பரிதாபத்துக்குரிய வாழ்க்கை வாழ்கிறார்கள் என்று கூறமுடியாது. சொத்தைக் குவிக்கும் நோக்குடன் அரசியலுக்கு வருபவர்களே ஏராளம்.

ஒரு காலத்தில் தமிழ் அரசியல் பரப்பில் ஊழல் மோசடிகள்,. முறைகேடுகளுக்கு பெரும்பாலும் இடமிருந்ததில்லை. ஆனால், இன்று தென்னிலங்கை அரசியலில் இருந்ததைப் போன்று இல்லாவிட்டாலும்,. தமிழ் அரசியலும் கணிசமானளவுக்கு ஊழல் மயமாகியிருக்கிறது. முறைகேடாக நடந்துவிட்டு "தேசியம்" என்பதை சற்று உரத்துப் பேசிவிட்டால் அதுவே அரசியல்வாதிகளுக்கு கேடயமாகிவிடும் ஆரோக்கியமற்ற ஒரு அரசியல் கலாசாரம் இன்று நிலவுகிறது.

பாராளுமன்றம் செல்வது என்பது பணம் பண்ணுவதற்காக என்ற நிலைமையை மாற்றக்கூடியதாக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை மக்கள் நிச்சயம் வரவேற்பார்கள். பொருளாதாரப் பலாபலன்களை சிறிதேனும் எதிர்பார்க்காமல் மக்கள் சேவைக்காக மாத்திரம் அரசியலுக்கு வரக்கூடியவர்களை அடையாளம் காண்பது என்பது பெரும் சிரமமான காரியமாகிப் போய்விட்ட அளவுக்கு கடந்தகால ஆட்சிகள் அரசியலை அற ஒழிப்புச் செய்து விட்டன.

# அரசாங்கம் மதத்தலைவர்களை அவமதித்துக் கொண்டிருக்கிறது

### எதிர்க்கட்சி தலைவர் சஜித் கவலை



கொழும்பு, பெப். 25

நாட்டில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் வேலையிழந்து வரும் வேளையில் அரசாங்கம் மதத் தலைவர்களை அவமதித்துக் கொண்டிருக்கிறது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று நாடு பல பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றது. ஒரு புறத்தில் அபிவிருத்தியடையும் நாட்டில் இருக்கவேண்டிய சமூக ஒழுக்கம், நாகரிகம் மற்றும் பண்பாடு மறைந்து வருகின்றன. மறுபுறம், வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்து பொறுப்புகள் வகிக்கும் அமைச்சர்கள் மதத் தலைவர்களை அவமதித்து, விலங்குகளின் பெயர்களைப் பயன்படுத்தி இழிவுபடுத்தி, அவர்களை தாக்கி வருகின்றனர்.

எல்லா மதங்கள், எல்லா மதத் தலைவர்களுக்கும் சமூகத்தில் தகுந்த மரியாதையை வழங்க வேண்டும். பொது மக்களாக மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அனைத்து மதங்களையும் பாதுகாப்பது நாட்டின் பொறுப்பாக இருந்தாலும், இன்று அரசாங்கத்தின் அமைச்சர்கள் தேரர்களை கேடுகெட்டவர்கள் என்று அழைக்கின்றனர். முகநூல் மூலம் மகா சங்கத்திற்கும் அருட்தந்தையர்கள் உள்ளிட்ட அனைத்து மதத் தலைவர்களையும் அவமதித்து வருகின்றனர் - என்றார்.

கொழும்பு - மேற்கு குப்பியாவத்தை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(எ)

# தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 31,000 வீடுகள் நிர்மாணிக்க திட்டம்

கொழும்பு, பெப். 25

வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 31, 000 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளதாக வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

"தமக்கென ஓரிடம் அழகான வாழ்க்கை" எனும் தொனிப்பொருளின் கீழ் 2026 தேசிய வீடமைப்புத் திட்டம் இன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

13 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் இந்த வீடமைப்பு நிர்மாணத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

(எ)

# நாட்டின் ஒரு சில பகுதிகளில் தொடர்ந்து மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, பெப். 25

தென் மாகாணத்திலும் இரத்தினபுரி, மொனராகலை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக மழையற்ற வானிலை நிலவக்கூடும் என்று அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனி மூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக ஏற்படக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேஷம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் உயரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். மகிழ்ச்சி உண்டாகும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிறப்பான நாள்.

**சிம்மம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உதவி கேட்டு தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப்போன காரியங்கள் முடியும். வியாபாரத்தில் லாபம் உண்டு. அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும்.

**மகரம்**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.


**கும்பம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். துணிச்சல் அதிகரிக்கும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

# புதிய பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கக்கோரி கையெழுத்து வேட்டை

வவுனியா, பெப். 25

தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தையும் புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தையும் முழுமையாக நீக்கக்கோரி தமிழ் மக்கள் சார்பில் மனுவொன்றை கையளிக்கும் நோக்கோடு பொது மக்களிடம் கையெழுத்து பெறும் செயல்பாடு நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது.



வவுனியா- இலுப்பையடியில் நடைபெற்ற இந்த கையெழுத்து பெறும் செயல்பாட்டில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த மனு எதிர்வரும் வாரங்களில் நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

(எ-10)

## நெடுந்தாரகை படகில்
# மதுபானம் கொண்டு சென்ற கடற்படையினரால் சர்ச்சை

யாழ்ப்பாணம், பெப். 25

நெடுந்தீவுக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற படகில் கடற்படையினர் மதுபான(பியர்) ரின்களையும் ஏற்றிச் சென்றமை தொடர்பில் பயணிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறிகாட்டுவானில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நெடுந்தீவு நோக்கிப் பயணித்த நெடுந்தாரகை படகில் கடற்படையினர் பெருமளவான பியர் ரின்களை ஏற்றி நெடுந்தீவுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

படகில் பெண்கள், சிறுவர்கள் என பெருமளவானவர்கள் பயணித்த நிலையில் மதுபான ரின்களை ஏற்றிச் சென்றுள்ளனர்.

பொதுப் போக்குவரத்து படகில் கடற்படையினர் அளவுக்கு அதிகமான மதுபான ரின்களை ஏற்றி சென்றமை தொடர்பில் பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

(எ-03)

# வவுனியாவில் புற்றுநோயால் 15 வயது மாணவன் மரணம்!

வவுனியா, பெப். 25

வவுனியாவில் புற்றுநோய் காரணமாக 15 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வவுனியா- நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த 15 வயது சுரேஷ் ஸர்ணவன் என்ற மாணவனே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்தார்.

(எ-10)

# நாகர்கோவில் வடக்கில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 25

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் வடக்கு பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் காலை நாகர்கோவில் வடக்கு பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, ஒரு கிலோ 750 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை கேரளக் கஞ்சாவுடன் மருதங்கேணி பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்தனர்.

(அ-எ)

# சாந்தனின் 2ஆம் ஆண்டு நினைவும் வழிபாடும்

யாழ்ப்பாணம், பெப். 25

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த ம. தி. சாந்தனின் இரண்டாம் ஆண்டு நினைவும் வழிபாடும் அவரது துயிலாலயத்தில் நடைபெறவுள்ளது.

எள்ளங்குளம், இந்து மயானத்தில் (மாவீரர் துயிலும் இல்லத்தில்) எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 09. 00 - 11.00 மணிவரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழர் மரபு வழிந்த "பள்ளிப்படை" வழிபாட்டில், தாயகத்தில், வழிபாட்டில் உள்ள ஒரே ஒரு பள்ளிப்படையாக சாந்தன் துயிலாலயம் அமைந்துள்ளது.

(எ)

# 12 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

மன்னார், பெப். 25

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்தனர். இதன்போது, மீன்பிடி படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னாருக்கு தெற்கு திசையில் அமைந்துள்ள இலங்கை கடற்பரப்பில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களும் அவர்களது படகும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திக்கோவிட்ட மீன்பிடி பரிசோதகர் அலுவலகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(எ)

# இந்த ஆண்டு இதுவரையில் 12,165 டெங்கு நோயாளர்கள் பதிவு

கொழும்பு, பெப். 25

நாடு முழுவதும் இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 12,165 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் மூன்று நாட்களுக்கு விசேட டெங்கு ஒழிப்புத் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

டெங்கு நோயாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளை இலக்கு வைத்து இந்த விசேட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் கபில கண்ணங்கர தெரிவித்தார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மாத்திரம் 889 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, நாடு முழுவதும் இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 12,165 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற நிலக்கரியால் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்கு ஆபத்து

கொழும்பு, பெப். 25

இறக்குமதி செய்யப்பட்டுள்ள தரமற்ற நிலக்கரியை நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தில் பயன்படுத்துவதன் மூலம் அங்குள்ள மின்பிறப்பாக்கிகளுக்கு சேதம் ஏற்படக்கூடும் என்று எரிசக்தி நிபுணர் விதுர ரலபனாவ தெரிவித்தார்.

இதுவரை காலமும் முன்னதாக இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியும் மின் உற்பத்தி நிலையத்துக்காக பயன்படுத்தப்பட்டபோதிலும், அடுத்த மாதம் (மார்ச்) முதலாம் திகதி முதல் முழுமையாக புதிய நிலக்கரியையே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் மின்பிறப்பாக்கிகளுக்கு சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது.

தற்போது 10 - 16 மணித்தியாலங்கள் போன்ற ஒரு சிறு காலப்பகுதிக்கு மாத்திரமே தென்னாபிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட நிலக்கரி பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் முந்தைய விநியோகத்தரால் கொண்டுவரப்பட்ட நிலக்கரி இன்னும் மின் உற்பத்தி நிலையத்தில் கையிருப்பில் உள்ளது. ஆனால், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலைய தரப்பினரிடம் கேட்டால், மார்ச் முதலாம் திகதிக்குப் பிறகு அவர்கள் மிகுந்த அச்சத்தில் இருப்பதாக கூறுகிறார்கள். ஏனெனில் பழைய நிலக்கரி தீர்ந்துவிடும் என்பதால், முழுமையாகப் புதிய நிலக்கரிக்கு மாற வேண்டியிருக்கும்.

இந்தத் தரமற்ற நிலக்கரியை 24 மணித்தியாலங்களும் பயன்படுத்தும்போது இயந்திரங்களுக்கு ஏற்படும் பாதிப்பே இங்குள்ள மிகப்பெரிய சிக்கலாகும்.- என்றார். (எ)

# இரு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து

## இரு சாரதிகள் படுகாயம்

கொழும்பு, பெப். 25

வாத்துவை - மொரந்துட்டுவ வீதியில் மெலேகம பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இரு பேருந்துகளிலும் பயணிகள் எவரும் இருக்கவில்லை. அத்துடன், இரண்டு பேருந்துகளினதும் சாரதிகள் காயமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த இரு சாரதிகளும் பாணந்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# பேருந்து- லொறி மோதி கோர விபத்து: ஒருவர் மரணம்! ஒருவர் கவலைக்கிடம்

கொழும்பு, பெப். 25

கொழும்பு- அவிசாவளை ஹைலெவல் வீதி, பன்னிப்பிட்டிய பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், மூவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து திடீரென கவனக்குறைவாக வீதிக்குள் நுழைய முயன்ற ஓட்டோ ஒன்றை மோதாமல் தவிர்க்க முயன்ற பேருந்து, வீதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், ஏனைய இருவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# துப்பாக்கிச்சூடு: முன்னாள் பொலிஸ் பரிசோதகர் கைது

கொழும்பு, பெப். 25

2023 ஆம் ஆண்டு வெலிகம ஹோட்டலுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த முன்னாள் பொலிஸ் பரிசோதகர் ஜகத் நிஷாந்த கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தின் பின்னர் அவர் வெளிநாடு சென்றிருந்ததுடன், நேற்று முன்தினம் மீண்டும் நாட்டுக்குத் திரும்பியபோதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. (எ)

# கறுப்பு பட்டிகளை அணிந்து சுங்க அதிகாரிகள் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 25

கடந்த 6 வருடங்களாக தாமதிக்கப்பட்டுள்ள பதவி உயர்வுகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட சுங்க தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமது பிரச்னைகள் குறித்து பலமுறை அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை முறையான தீர்வுகள் வழங்கப்படவில்லை என சுங்க தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் நாடு முழுவதுமுள்ள அனைத்து சுங்க அலுவலகங்களிலும் கறுப்புப் பட்டிகளை அணிந்து கடமைகளில் ஈடுபட அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். (எ)

# நிலக்கரி கொள்வனவில் இரகசிய ஒப்பந்தங்கள்

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 25

கடந்த காலங்களில் ராஜபக்ஷ தரப்பின் நெருங்கிய உறவினர்களுக்கு சொந்தமானவை என தற்போதைய அநுர அரசாங்கத்தால் விமர்சிக்கப்பட்ட அதே நிறுவனங்களுடனேயே இன்றும் நிலக்கரி கொள்வனவுக்கான இரகசிய ஒப்பந்தங்கள் முன்னெடுக்கப்படுவதாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம்சாட்டியுள்ளார்.

சர்வஜன அதிகாரம் கட்சியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் நிலக்கரி இறக்குமதியில் ஈடுபட்ட பிளாக் சேண்ட் எனும் நிறுவனமே தற்போது பொடென்ஷியா எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. முன்னைய ஆட்சியாளர்களின் பிள்ளைகளுக்கு சொந்தமான ஊழல் நிறைந்த நிறுவனம் என விமர்சித்த இதே பொடென்ஷியா நிறுவனத்திடமே தற்போதைய அரசாங்கம் 15 நிலக்கரி கப்பல்களை கொள்வனவு செய்துள்ளது.

அமைச்சர் ரஷ்யாவுக்குச் சென்று அந்த நிறுவனத்தின் தாய் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பின்னர் வந்த 5 கப்பல்களில் 3 கப்பல்கள் இரத்து செய்யப்பட்டு 2 மாத்திரமே எடுக்கப்பட்டன. இதில் என்ன ஒப்பந்தம் நடந்தது என்பது எமக்குத் தெரியாது. ஆனால், இது திட்டமிட்ட ஊழல் என்பது தெளிவாகத் தெரிகிறது.- என்றார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குமண தேசிய பூங்காவுக்குள்

# வனவிலங்குகளை வேட்டையாடிய 6 பேர் அதிரடிப்படையினரால் கைது

அம்பாறை, பெப். 25

குமண தேசிய பூங்காவுக்குள் அத்துமீறி நுழைந்து வனவிலங்குகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியை படகு மூலம் கடத்திச் சென்ற ஆறு பேரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

அறுகம்குடா விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட தொடர் சுற்றிவளைப்புகளின் போதே இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடற்கரைப் பகுதியில் வைத்து இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் 57 கடலாமை முட்டைகள் அவர்கள் வசமிருந்து மீட்கப்பட்டன. வனவிலங்கு இறைச்சிகள் ஒரு தொகை மற்றுமொரு சோதனையில் மீட்கப்பட்டன. இதில், 17 கிலோ கிராம் மான் இறைச்சி, 56 கிலோ கிராம் காட்டு எருமை இறைச்சி மற்றும் 16 கிலோ கிராம் மான் மற்றும் எருமையின் ஈரல் என்பன உள்ளடங்குகின்றன.

மேலும், கடல் வழியாக இறைச்சிகளை கடத்துவதற்கு பயன்படுத்திய ஒரு பைபர் படகு, 25 குதிரைத்திறன் கொண்ட வெளிச்செல்லும் இயந்திரம் மற்றும் இரண்டு எரிபொருள் கொள்கலன்களும் பறிமுதல் செய்யப்பட்டன. (எ-01)

# மூன்று செயல் திட்டங்கள் பதுளையில் முன்னெடுப்பு

பதுளை, பெப். 25

மலையக கல்வி அபிவிருத்தி மன்றம், பதுளை மாவட்டத்தில் வாழும் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தையும் கல்வி முன்னேற்றத்தையும் மேம்படுத்தும் நோக்கில் மூன்று முக்கிய செயல் திட்டங்களை முன்னெடுத்தது.

கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் பிரம்டன் தமிழ் ஒன்றியம் மற்றும் கொழும்பை மையமாகக் கொண்ட மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் ஆகியவற்றின் பூரண அனுசரணையில், டித்வா புயல் தாக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த பதுளை மாவட்டத்தின் பசறை பிரதேசத்துக்குட்பட்ட யூரி தோட்டம் மற்றும் லுணுகல பிரதேசத்துக்குட்பட்ட மடுல்சீமை, கல்லுள்ள, டூமோ தோட்டப் பகுதிகளில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு எரிவாயு அடுப்புகள், மின்சார கேற்றில்கள், சமையல் பாத்திரங்கள், உடைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. அத்தோடு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (எ)

# திருமலை பண்ணையாளர்களுக்கு இரண்டாம் கட்ட இழப்பீடு வழங்கல்



திருகோணமலை, பெப். 25

திருகோணமலை மாவட்ட பண்ணையாளர்களுக்கான இரண்டாம் கட்ட இழப்பீடு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட பண்ணையாளர்களின் நலனுக்காக அரசாங்கத்தால் இதுவரை மொத்தம் 558. 5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக இரண்டாம் கட்ட இழப்பீடாக 281 பயனாளிகளுக்கு 23 கோடியே 21 இலட்சத்து 48,750 ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதில், கிண்ணியா பிரதேசம் அதிக இழப்பீட்டு தொகையை பெற்றுள்ளது. (எ)

## கடலரிப்பு அதிகரிப்பு

அம்பாறை, பெப். 25

நிந்தவூர் (அட்டப்பள்ளம்) பிரதேசத்தில் கடலரிப்பால் பாதிக்கப்பட்ட இடங்களை பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா நேரில் சென்று பார்வையிட்டு, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பு காரணமாக அப்பிரதேசத்தில் உள்ள அதிகமான பொதுமக்களின் காணி மற்றும் தென்னந்தோப்புகள் கடலுக்குள் சென்று விட்டன. இந்த நிலையில், பாதிக்கப்பட்ட இடங்களை ஆதம்பாவா எம். பி. பார்வையிட்டுள்ளார். (எ)

### நோன்பு காலத்தை முன்னிட்டு

# ஹோட்டல்கள், மரக்கறி விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை

சாய்ந்தமருது, பெப். 25

நோன்பு காலத்தை முன்னிட்டு ஹோட்டல்கள் மரக்கறி விற்பனை நிலையங்களில் விசேட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

உணவுப் பொருட்களின் தரம், சேமிப்பு முறை, காலாவதி திகதி, சுற்றுப்புறத் தூய்மை, பணியாளர்களின் தனிநபர் சுகாதாரம் உள்ளிட்ட அம்சங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன.

மேலும், உணவுகளை சுகாதாரமான முறையில் தயாரித்து, சேமித்து, விற்பனை செய்வதற்கான சுகாதார விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பிலும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (எ-01)

# சோமாவதி - சுங்காவில பிரதான வீதி நீரில் மூழ்கியது

### போக்குவரத்து இடைநிறுத்தம்

கண்டி, பெப். 25

சோமாவதி - சுங்காவில பிரதான வீதி தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், குறித்த வீதியூடான போக்குவரத்து நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மகாவலி கங்கை பெருக்கெடுத்ததன் காரணமாக, குறித்த வீதியின் திக்கல பகுதியில் 35 முதல் 37 கிலோ மீற்றர் வரையான பகுதி சுமார் இரண்டரை அடி வரை நீரில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக, சோமாவதி - சுங்காவில வீதியூடாக வரலாற்று சிறப்பு மிக்க பொலநறுவை சோமாவதி விகாரைக்கு செல்லவிருக்கும் பக்தர்கள், மாற்று வழிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ)

# பாடசாலையை பாதுகாப்பான இடத்தில் அமைக்க வேண்டும்

### தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

நுவரெலியா, பெப். 25

யூரி தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கவனவீர்ப்பு பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக யூரி தோட்டப் பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர். இதன்விளைவாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மக்கள் வசிக்கும் பகுதிகள் பெரிதும் சேதமடைந்ததுடன், தோட்டத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலை, ஆலயம் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன. இருப்பினும், இதுவரை உரிய புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என தொழிலாளர்கள் குற்றம்சாட்டினர்.

தற்போது யூரி தோட்டப் பாடசாலை பாதுகாப்பற்ற நிலையில் செயல்பட்டு வருவதாகவும், மாணவர்களின் பாதுகாப்பு கடுமையாக கேள்விக்குறியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, பாதுகாப்பான தோட்டக் காணிகளை அரசாங்கத்தின் மூலம் சட்டபூர்வமாகப் பெற்றுக் கொண்டு, பாடசாலையை புதிய இடத்தில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது. (எ)

### அறுந்து விழுந்த இரும்புப் பாலம்

# ஆபத்தான முறையில் ஆற்றை கடக்கும் மக்கள்



நுவரெலியா, பெப். 25

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் நுவரெலியா, லிந்துலை மெராயா பகுதியிலிருந்து ஹென்போல்ட் தோட்டத்துக்கு செல்லும் பகுதியில் ஆக்ரா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் இரும்பு பாலம் அறுந்து ஆற்றில் விழுந்தது. இதன் காரணமாக, அந்தப் பகுதியில் போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால், லிந்துலை - ஹென்போல்ட் தோட்டத்துக்கு கீழ்ப் பகுதியில் அமைந்துள்ள மிளகு சேனை, ஊட்டுவெளி, சென்ட்ரல் கிளாஸ் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் 800இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக ஆபத்தான முறையில் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

சிறியளவில் மழை பெய்தாலே ஆற்றில் நீர்மட்டம் உயர்ந்து, மக்கள் அந்த வழியாகச் செல்ல முடியாத நிலை உருவாகிறது. இவ்வாறான சூழ்நிலைகளில், அவர்கள் 5 கிலோ மீற்றர் தூரம் சுற்று வீதியை பயன்படுத்த வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. (எ)

# காட்டு யானை தாக்கி முதியவர் உயிரிழப்பு

அம்பாறை, பெப். 25

அம்பாறை - பானம பகுதியிலுள்ள பானம ஏரிக்கு அருகில், காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

யானை தாக்குதலுக்குள்ளான குறித்த நபர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பானம தெற்கு பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய வயோதிபர் என தெரியவந்துள்ளது.

குறித்த வயோதிபர் பானம ஏரிக்கு நீராடுவதற்காக சென்று, திரும்பியபோது காட்டு யானை தாக்கியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பானம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.சர்வதேச...

அதற்குத் தேவையான சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகள் அவசியமானவை.

எனவே, சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளுடனும் இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மைதானம் அமைக்கும் வேலைத்திட்டத்தை எவ்விதத் தடையுமின்றி விரைவில் முடிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்." - என்றார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி கிடைத்தவுடன், இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டுமானப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது-என்றார். (அ)

## புதிய...

தொடர்ந்து பெறுவதற்கு, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலான சர்வதேச தரத்திலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவருவது ஒரு முக்கிய நிபந்தனையாகும். சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படாவிடின் இந்தச் சலுகை பாதிக்கப்படலாம் என்ற எச்சரிக்கையும் மறைமுகமாக விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## உயிர்த்த...

என்ற ரீதியில் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளுக்கமைய, சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவதாகவும், வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன், சில நபர்கள் வெளிநாடுகளில் இருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

அதற்கமைய, குற்றப்புலனாய்வு திணைக்களம் உரிய விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், எதிர்வரும் ஏப்ரல் 21 இற்கு முன்னதாக நீதியை வழங்க முடியாவிட்டாலும், விரைவில் இதற்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதாக அமைச்சரவை பேச்சாளர் கூறினார். (அ)

## ஜே.வி.பி...

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 38 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் போதான எதிர்ப்பு இந்தியாவிற்கு எதிரானது அல்ல, மாறாக அப்போதைய ராஜீவ் காந்தி மற்றும் ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கங்களுக்கு எதிரானதாகும்.

நாம் அந்த அரசாங்கங்கள் பின்பற்றிய அரசியல் கொள்கைகளையே எதிர்த்தோம். மாறாக எமது எதிர்ப்பு இந்தியாவிற்கோ அல்லது இந்திய விரிவாக்க வாதத்திற்கோ எதிரானது அல்ல.

அதேவேளை கடந்த 30 ஆண்டுகளுக்கு முந்தைய சூழலை விட தற்போது உலகம் மாறிவிட்டது-என்றார். (அ)

## பருத்தித்துறை...

செலுத்தப்பட்டு ஆரம்பமானது.

நேற்றைய அமர்விலேயே குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தவிசாளர் தனது தலைமை உரையில், அனைத்து உறுப்பினர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் எனவும், மக்களுக்கு தரமான சேவையை வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அமைந்துள்ள மந்திகை பகுதியில் பாடசாலை ஒன்றுக்கு மிக அருகமையிலும், மக்கள் குடியிருப்புக்கு மத்தியிலும், பிரதான வீதி ஓரமாகவும் ஏற்கனவே இயங்கி வந்த சவப்பெட்டி கடையை கறுப்பு கண்ணாடியால் மறைத்து, சவப்பெட்டி மட்டும் விற்பனை செய்வதற்கு நிபந்தனையுடன் அனுமதிப்பது எனவும், இறந்த உடலங்களை குளிரூட்டியும், அங்கு வைத்து இறந்த உடலங்களை பதப்படுத்தவும் தடைவிதிப்பது எனவும், பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட ஆறாம் வட்டாரத்தில் குறித்தொதுக்கப்பட்ட மாகாண சபை நிதி மூலம் சீர்செய்வதற்கு அனுமதிப்பது எனவும், தீர்மானங்ள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன், மக்களால் சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாகவும் ஆரயப்பட்டது.

தொடர்ந்து பயங்கரவாத தடை சட்டத்தை நீக்க கோரியும்,

புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டத்தை மீளப்பெறக் கோரியும், சபையில் தீர்மானம் நிறைவற்றப்பட்டது.

அமர்வில் பங்கேற்ற 19 உறுப்பினர்களில், 15 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்து தீர்மனத்தை நிறைவேுற்றிக்கொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் 4 உறுப்பினர்கள், வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

உறுப்பினர் ஒருவர், சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை, பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இராணுவத்தினர் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது எனவும், அதனால் மாணவர்கள் உட்பட சிறுவர்கள் புகைத்தல் மற்றும் மதுப்பழக்கத்தில் ஈடுபடுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டதுடன், பொதுமக்களுக்கு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடாது எனவும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ)

## மைத்ரீ விக்கிரமசிங்க...

கவலையை வெளியிட்டுள்ள கற்றறிந்த, புலமையாளர்கள் "விசாரணை நடவடிக்கைகள் சுயாதீன கல்வியா ளர்களுக்கு துன்புறுத்தல், மிரட்டல் அல்லது நற்பெயருக்கு தீங்கு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளுமாறும், ஜனநாயகத்தின் அத்தியாவசிய தூண்களான கல்வி, சுதந்திரம், நிறுவன சுயாட்சி ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கவும், அரசியல் பழிவாங்கலில் இருந்து புலமையாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேராசிரியர் மைத்ரீ விக்கிரமசிங்கவை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறித்து வெளியான செய்திகளைத் தொடர்ந்து, கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள், பெண்ணிய ஆர்வலர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் உட்பட சுமார் 85 பேர் கையொப்பமிட்டு "ஒற்றுமையின் வெளிப்பாடு" என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில்,

"வோல்வர்ஹம்டன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பாலின சமத்துவம் மற்றும் பால்நிலை சமத்துவம் குறித்த விரிவான ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கொள்கைப் பணிகளை அங்கீகரிக்கும் விதமாக கௌரவ பேராசிரியராகக் கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் மைத்ரீ விக்கிரமசிங்க அந்நிகழ்வில் கலந்து கொள்ள, அவரது கணவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொது நிதியைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக நடந்து வரும் வழக்குடன் இந்த அழைப்பாணை தொடர்புடையதாகக் கூறப்படுகிறது.

இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்ற பேராசிரியர் மைத்ரீ விக்ரமசிங்க, களனி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறைத் தலைவராகவும் இருக்கைப் பேராசிரியராகவும் பணியாற்றுகிறார், அந்தப் பல்கலைக்கழகத்தின் பாலின ஆய்வு மையத்தின் நிறுவன இயக்குநராகவும் உள்ளார். மூன்று தசாப்தங்களுக்கும் மேலான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி அனுபவத்துடன், இலங்கையிலும் சர்வதேச அளவிலும் பாலின சமத்துவக் கொள்கை மேம்பாடு, பயிற்சி மற்றும் திட்ட மதிப்பீட்டுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, கொமன்வெல்த் பல்கலைக்கழகங்களின் சங்கம் மற்றும் கொமன்வெல்த் செயலகம் உட்பட தேசிய மற்றும் சர்வதேச ஆலோசனை அமைப்புகளில் அவர் ஆற்றிய சேவை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் நினைவு கூரப்படுகிறது.

உள்ளூரிலும், சர்வதேச ரீதியிலும் புகழ் பெற்ற ஒரு கல்வியியலாளரான பேராசிரியர் மைத்ரீ விக்கிரமசிங்க மீதான விசாரணை நடவடிக்கைகள் நியாயமாகவும், வெளிப்படையாகவும், உரிய நடைமுறைக்குக் கட்டுப்பட்டும் நடத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## பல்கலை...

மணிநேர அடையாள எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு அறிவித்துள்ளது.

இது பற்றி, அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "அரசாங்கத்தின் புதிய வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் காரணமாக பல்கலைக்கழக போதனைசாராப் பணியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது பற்றி விரிவான விவரங்கள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், குறைந்த பட்சம் இதுபற்றிப் பேசுவதற்குக்குக் கூட எமக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. பதின்நான்கு தங்களுக்கு மேலாக நீடிக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டி நிரந்தர தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ)

## தென்மாகாண...

நேற்று - 24 ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவருக்கான நியமனக்கடிதம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டதுடன், ஜனாதிபதி முன்னிலையில் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நியமனம் வழங்கப்பட்ட வேளையில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்கவும் உடனிருந்தார்.

பேராசிரியர் சுசிறிபால மனவடு ருகுணு பலகலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், சிங்கள கற்கைகள் துறைத் தலைவராகவும், முன்னாள் சிரேஷ்ட உதவி நூலகராகவும் பதவி வகித்தவர். (அ)

## வடக்கின்...

சபையால் புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு மற்றும் வவுனியா வடக்கு ஆகிய பிரதேச சபைகளுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் மாங்குளம் நகர அபிவிருத்தித் திட்டத்தின் (2026 - 2036) உத்தியோக பூர்வ ஆரம்ப நிகழ்வும், முதலாவது பங்குதாரர்கள் கூட்டமும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், எமக்குக் கிடைக்கும் அரிய வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் நாம் உரிய முறையில் பயன்படுத்தி, மாகாணத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றவேண்டும் என்று வலியுறுத்தினார்.

வாய்ப்புகளைத் தவறவிட்டால் அவை மீண்டும் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே என்று குறிப்பிட்ட ஆளுநர், எமக்குத் தேவையானவற்றை நாமே கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

"நான் முல்லைத்தீவு மாவட்ட செயலராகக் கடமையாற்றிய காலத்தில், மாங்குளத்தை வடக்கு மாகாணத்தின் மையமாக அடையாளப்படுத்தி அதற்கான நிலப்பரப்புகளும் ஒதுக்கப்பட்டன. எனினும், அத்திட்டங்கள் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. போரின் பின்னர், ஏ-9 பிரதான வீதியில் அமைந்துள்ள மாங்குளம் நகரம் வலுவிழந்த நிலையில் காணப்படுவது கவலைக்குரியது.

அதனை மாற்றியமைத்து, நகரத்தை மீளக் கட்டியெழுப்பும் பெரும் முயற்சியின் ஒரு வெளிப்பாடாகவே இத்திட்டம் அமைந்துள்ளது." என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி இயங்கும் வடக்கு மாகாண சபையின் பல திணைக்களங்களை, படிப்படியாக மாங்குளத்தை நோக்கி நகர்த்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் இதன்போது வெளிப்படுத்தினார்.

இந்நிகழ்வில், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், செயலாளர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கொழும்பு தலைமைப் பணிமனை மற்றும் வடக்கு மாகாணப் பணிமனை அதிகாரிகள், ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ)

## மட்டுவில்...

சத்தியசோதி, அரச அதிகாரிகள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், கடைகளின் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பொருளாதார மத்திய நிலையத்தை வினைத்திறனாக இயங்கச் செய்வதற்காக, யாழ்.அரசாங்க அதிபரின் தலைமையில், தென்மராட்சி பிரதேச செயலர், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர், விவசாய சம்மேளனங்கள், கடைகளின் உரிமையாளர்கள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. (அ)

## இலங்கையில்...

கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்தத் தொகை அதிகரித்துள்ளது.

இதேவேளை, 2026 ஆம் ஆண்டுக்கான புதிய கட்சிகளைப் பதிவு செய்யும் நடைமுறைகள் கடந்த ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் இடைத்தரகராக பிரதமர் ஹரிணி!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 25

பிரதமர் ஹரிணி அமரசூரிய தமிழ் புலம் பெயர் அமைப்புக்களின் இடைத்தரகராக மாறியுள்ளதாக பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் பிரிய ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடகாலம் கடந்துள்ளது. இத்தகைய பின்னணியில் அரசாங்க தரப்பினர் முன்வைக்கும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவுள்ளன.

வடக்கிற்கு விஜயம் செய்த பிரதமர் எங்களை கேட்டா யுத்தம் செய்தார்கள் என்கின்றார். நாம் தமிழ் இனத்திற்கு எதிராக யுத்தம் செய்யவில்லை. மாறாக பயங்கரவாதத்திற்கு எதிராகவே யுத்தம் செய்தோம்.ஆனால் பிரதமரின் கருத்து யுத்தம் செய்த இளைஞர்களை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் கொள்கையை விதைக்கும் விடயத்தையே பிரதமர் முன்னெடுத்து வருகின்றார்.அந்த வகையில் புலம் பெயர் அமைப்புக்களின் தரகராகவே பிரதமர் உள்ளார்-என்றார். (அ)

# வவுனியாவில் பத்தாவது வருடத்தை எட்டியது காணாமல்போனோரின் உறவுகள் போராட்டம்



வவுனியா, பெப். 25

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் பத்தாவது வருடத்தை எட்டியதை முன்னிறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா தபால் திணைக்களத்திற்கு முன்பாக 3291 நாளாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் நடத்தி வரும் பந்தலுக்கு முன்பாகவே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது காணாமல்போன உறவுகளின் படங்களினை ஏந்தியவாறும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கொடிகளை ஏந்தியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# போர்த்துக்கல் வெளியுறவு அமைச்சர் இரண்டு நாள் பயணமாக இலங்கைக்கு!

கொழும்பு, பெப். 25

போர்த்துக்கல் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பாலோ ரஞ்சல், இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று காலை இலங்கையை வந்தடைந்தார்.

போர்த்துக்கல் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் நால்வர் அடங்கிய தூதுக்குழுவினரும் இவருடன் வருகை தந்துள்ளனர்.

டுபாயிலிருந்து வருகை தந்த எமிரேட்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான ஈ.கே-650 இலக்க விமானம் மூலம் நேற்று காலை 8:35 மணியளவில் இவர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தின் விசேட விருந்தினர் அறையில், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இக்குழுவினரை நேரில் சென்று வரவேற்றனர். (அ)

# சமையல் எரிவாயு குறித்து நாடு முழுவதும் சோதனை

கொழும்பு, பெப். 25

சமையல் எரிவாயு கொள்கலன்கள் தொடர்பாக, நுகர்வோர் விவகார அதிகார சபை நாடு தழுவிய ரீதியில் சோதனைகளை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் சில வர்த்தகர்கள் சமையல் எரிவாயு கொள்கலன்களைப் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தகர்களைக் கண்டறியும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. லிட்ரோ மற்றும் லாப்ஸ் ஆகிய இரண்டு வகையான சமையல் எரிவாயு கொள்கலன்களுக்கும் நாடு முழுவதும் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# எரிவாயுத் தட்டுப்பாடு குறித்து எதிர்க்கட்சிகள் பொய் பிரசாரம்

## கூறுகிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 25

நாட்டில் எரிவாயுத் தட்டுப்பாடு நிலவுவதாக எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரம் செய்வதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

லிட்ரோ நிறுவனம் முன்னதாக தினசரி 1,100 மெற்றிக் தொன் எரிவாயுவை விநியோகித்த நிலையில், தற்போது அதனை 1,500 மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளது.

சந்தையின் தேவையைவிட அதிகமான எரிவாயு கையிருப்பில் உள்ளது. ஆகவே விநியோகத்தில் எந்த சிக்கலும் இல்லை. தனியார் நிறுவனமான லாப்ஸ் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு முறையாக எரிவாயுவை விநியோகிக்கத் தவறியுள்ளது.

சந்தையில் சுமார் 20 வீத பங்கை கொண்டுள்ள லாப்ஸ் நிறுவனம், தனது பொறுப்பைச் சரியாக நிறைவேற்றாதது குறித்து வர்த்தக அமைச்சர் அந்த நிறுவனத்துடன் பேச்சு நடத்தியுள்ளார். நுகர்வோர் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு அந்த நிறுவனம் பொறுப்பேற்கவேண்டும்.

சமூக வலைத்தளங்கள் மற்றும் சில ஊடகங்கள் வாயிலாக நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு இருப்பதாக எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரம் செய்கின்றன. இவ்வாறான வதந்திகளை நம்ப வேண்டாம் - என்றார். (அ)

# மயானத்தில் எரிந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

வவுனியா, பெப். 25

வவுனியா ஈரற்பெரியகுளம் மயானத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்தப்பகுதியில் சடலம் ஒன்று உள்ளமை தொடர்பாக ஈரற்பெரியகுளம் பொலிஸாருக்கு நேற்றுக் காலை தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சுமார் 40-45 வயது மதிக்கத்தக்க ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதுவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது உடலில் சிறுபகுதி தீயினால் எரிந்துள்ளதாக கூறப்படுகின்றது. (அ)

# சுவாமி கைலாசானந்த் கிரி ஜி வடக்கு ஆளுநரை சந்தித்தார்

யாழ்ப்பாணம், பெப். 25

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான ஆன்மீக மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், இலங்கைக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டுள்ள "ஸ்ரீ பஞ்ச் அக்னி அகாதாஷவின் தலைவரான சுவாமி கைலாசானந்த் கிரி ஜி மகாராஜ், நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

உலங்குவானூர்தி மூலம் பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த சுவாமி கைலாசானந்த் கிரி ஜி மகாராஜ் மற்றும் அவரது சிறப்புத் தூதுக்குழுவினர், அங்கிருந்து யாழ்ப்பாணம் நகரிலுள்ள தனியார் விடுதிக்குச் சென்றனர். அங்கு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் தலைமையிலான குழுவினர் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பளித்தனர்.

இதன்போது, சுவாமி கைலாசானந்த் கிரி ஜி மகாராஜுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்த ஆளுநர், வடக்கு மாகாண சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தால் விசேடமாக வெளியிடப்பட்ட "சிவன் யாத்திரைப் பாதை" மற்றும் "இராமாயண யாத்திரைப் பாதை" ஆகிய நூல்களையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, சுவாமி கைலாசானந்த் கிரி ஜி மகாராஜ் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்துக்குச் சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார். (அ)




# மின்சார சபை ஊழியர் சங்கம் வேலைநிறுத்த முன் அறிவிப்பு!

கொழும்பு, பெப். 25

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் முன்வைத்துள்ள எட்டு அம்சக் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் உடனடியாகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக மின்சார சபை ஊழியர் தொழிற்சங்கங்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

மின்சார சபை தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காமல், சட்டவிரோத மறுசீரமைப்புக்கு வழி ஏற்படுத்தும் வகையில் சபையைக் கலைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டால் - அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டால் தமக்கு விருப்பமில்லாவிடினும் கூட அடுத்துவரும் 48 மணி நேரத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நடந்து கொண்டிருக்கும்போது இதுபோன்ற நடவடிக்கையை மேற்கொள்ளவது பொருத்தமாக இருக்காது என்பதனால், பரீட்சை முடிவதற்குள் உரிய தீர்வுகள் வழங்கப்படாவிடின் உடனடி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்றும், இந்த முடிவு நாட்டையும் அதன் குடிமக்களையும் கடுமையாக பாதிக்கும் எனினும், அரசாங்கமே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தை மீண்டும் எச்சரித்துள்ளன.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட இலங்கை மின்சார சபை தொழில்நுட்ப பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கத்தின் துணைத் தலைவர் நந்தன உதயகுமார, மின் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க, சுயாதீன தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரபாத் பிரியந்த மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர் பொறியாளர் சந்தருவன் மஞ்சநாயக்க ஆகியோர் கூட்டாக இந்த விடயத்தைத் தெரிவித்தனர்.

மின்சார சபையின் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தாமாக விரும்பி ஓய்வு பெற விண்ணப்பித்த ஊழியர்களுக்கு எதுவித சிக்கல்கள் - தாமதமுமின்றி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதை அரசாங்கம் உறுதி செய்யு வேண்டும் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ஓ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.